# மனித–வனவிலங்கு மோதல்: நிவாரணம் ரூ.10 லட்சமாக உயர்வு

## முதல்வர் ஸ்டாலின் உத்தரவு

**சென்னை, ஜன. 13:** மனித–வன விலங்கு மோதல்களில் ஏற்படும் மனித உயிரிழப்பு மற்றும் நிரந்தர இயலாமைக்கான நிவாரணத் தொகையை ரூ.5 லட்சத்திலிருந்து ரூ.10 லட்சமாக உயர்த்தி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இது குறித்து சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலர் சனிக்கிழமை வெளியிட்ட செய்தி: மனித–வனவிலங்கு மோதல்களைக் குறைக்க தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. 2021– ஆம் ஆண்டு நவம்பரில் தமிழக அரசு வெளியிட்ட அரசாணையின்படி, இத்தகைய மோதல்களில் மனித உயிரிழப்பு அல்லது நிரந்தர இயலாமைக்கான இழப்பீட்டுத் தொகை ரூ.4 லட்சத்தில் இருந்து ரூ.5 லட்சமாக உயர்த்தப்பட்டது.

இந்நிலையில், மனித–வனவிலங்கு மோதல்களில் ஏற்படும் உயிரிழப்புகளுக்கு கூடுதல் நிவாரண உதவித் தொகை வழங்க வேண்டுமென அரசுக்கு முறையீடுகள் வந்துள்ளன.

அதன்படி, இத்தகைய நிகழ்வுகளில் பாதிக்கப்படும் குடும்பங்களின் சிரமங்களைப் போக்க, மனித உயிரிழப்பு மற்றும் நிரந்தர இயலாமைக்கான இழப்பீட்டுத் தொகையை ரூ.5 லட்சத்திலிருந்து ரூ.10 லட்சமாக இரு மடங்கு உயர்த்தி முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இந்த ஆணை உடனடியாக நடைமுறைக்கு வந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய ரூபாயை தங்கள் நாட்டில் பயன்படுத்த 35 நாடுகள் ஒப்புதல்

## மத்திய அமைச்சர் தகவல்

**புது தில்லி, ஜன. 13:** இந்திய ரூபாயை தங்கள் நாட்டில் பயன்படுத்திக் கொள்ள இதுவரை 35 நாடுகள் ஒப்புதல் அளித்துள்ளன என்று மத்திய சட்டத் துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் தெரிவித்தார்.

'இந்திய ரூபாயின் 100 ஆண்டு கால பயணம்' என்ற தலைப்பில் தில்லியில் சனிக்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் பங்கேற்றார். தொடர்ந்து செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

அம்பேத்கர் சட்டமேதை மட்டுமல்ல, பொருளாதாரத்திலும் நிபுணத்துவம் பெற்றவர் என்பதை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஆங்கிலேய ஆட்சியாளர்கள் இந்திய ரூபாயின் மதிப்பை குறைக்க முற்பட்டபோது அதனை எதிர்கொள்ள அம்பேத்கரின் பங்களிப்பு முக்கியமானதாக இருந்தது.

லண்டன் பொருளாதார கல்வி நிலையத்தில் அம்பேத்கர் தாக்கல் செய்த இந்திய ரூபாய் தொடர்பான ஆய்வறிக்கையின் அடிப்படையில்தான் 1935-ம் ஆண்டு இந்திய ரிசர்வ் வங்கி உருவாக்கப்பட்டது.

இப்போது பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சியில் ரூபாயின் மதிப்பு ஸ்திரமாக உள்ளது. நமது ரூபாயை தங்கள் நாட்டில் பயன்படுத்த இதுவரை 35 நாடுகள் ஒப்புதல் அளித்துள்ளன. இதன் மூலம் அந்த நாடுகளுக்குப் பயணிப்போது அந்த நாட்டுப் பணம் அல்லது அமெரிக்கா டாலரைப் பயன்படுத்தாமல், இந்திய ரூபாயை பயன்படுத்திக் கொள்ள முடியும் என்றார்.

# உடல் உறுப்பு தானம் மூலம் கடந்த ஆண்டில் 1,000 பேர் பயன்

KUMAR MAYILSAMY

## அமைச்சர் மா.சுப்பிரமணியன்



**சென்னை, ஜன.13:** கடந்த ஆண்டில் 178 பேர் உடல் உறுப்பு தானம் பெறப்பட்டதன் மூலம் 1,000 பேருக்கு மறு வாழ்வு கிடைத்துள்ளது என்று அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னை சைதாப்பேட்டை ஜோதியம்மாள் நகரை சேர்ந்தவர் ராமமூர்த்தி (27). அண்மையில் சென்னை அண்ணா சாலையில் விபத்தில் சிக்கிய அவர் ராயப்பேட்டை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். தலையில் பலத்த காயம் ஏற்பட்ட அவருக்கு மருத்துவர்கள் தீவிர சிகிச்சை அளித்து வந்த நிலையில், சனிக்கிழமை அவர் மூளைச்சாவு அடைந்தார்.

மறைந்த ராமமூர்த்தியின் தந்தையின் அனுமதியுடன் அவரது உடல் உறுப்புகள் தானமாக பெறப்பட்டு 7 பேருக்கு பொருத்தப்பட்டன.

இந்நிலையில், சைதாப்பேட்டை இல்லத்துக்கு சனிக்கிழமை நேரில் சென்று சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், தென் சென்னை மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர் ராமமூர்த்தியின் உடலுக்கு அரசு மரியாதை செலுத்தினார்.

பின்னர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்களிடம் பேசியது:

https://t.me/dinamanihighlights

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 2023-ம் ஆண்டு உடலுறுப்பு தானம் செய்பவர்களுக்கு அரசு மரியாதை செய்யப்படும் என்ற அறிவிப்பை வெளியிட்டார். இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட மூன்று மாதத்தில் 61 பேர் மூளைச்சாவு அடைந்தபிறகு, அவரது குடும்பத்தினர் விருப்பத்தின்பேரில் உடலுறுப்பு தானம் செய்திருக்கின்றனர்.

2022-ஆம் ஆண்டைவிட 2023-ஆம் ஆண்டில் உடலுறுப்பு தானம் செய்தவர்களின் எண்ணிக்கை 11.4 சதவீதம் அதிகரித்துள்ளது.

குறிப்பாக, முதல்வரின் அறிவிப்புக்குப்பின் 3,958 பேர் தங்களுடைய மறைவுக்கு பின்னர் உடலுறுப்பு தானம் செய்வோம் என்று பதிவு செய்துள்ளனர். உடலுறுப்பு வேண்டி காத்திருப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது. சிறுநீரகம் வேண்டி காத்திருப்பவர்களின் எண்ணிக்கை 6,322 பேர், கல்லீரல் 438 பேர், இதயம் 76 பேர், நுரையீரல் 64 பேர், இதயம் மற்றும் நுரையீரல் 25 பேர், கைகள் 27 பேர், சிறுகுடல் 2 பேர், சிறுநீரகம் மற்றும் கல்லீரல் 40 பேர், சிறுநீரகம் மற்றும் கணையம் 42 பேர், கணையம், சிறுகுடல் மற்றும் வயிறு ஒருவர் என மொத்தம் 7031 பேர் உடலுறுப்பு தானம் வேண்டி காத்திருக்கின்றனர்.

கடந்த ஆண்டு 178 உடலுறுப்புகள் தானம் செய்யப்பட்டதன் மூலம் 1,000 பேர் பயன்பெற்றுள்ளனர் என்றார் அவர்.

நிகழ்வில், தமிழ்நாடு உடலுறுப்பு ஆணையத்தின் உறுப்பினர் செயலாளர் கோபாலகிருஷ்ணன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்து அஞ்சலி செலுத்தினர்.

# 9 பேருக்கு தமிழக அரசின் விருதுகள்: முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

KUMAR MAYILSAMY



தமிழக அரசின் விருதுகளை விருதாளர்களுக்கு வழங்கிய முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், பி.கே.சேகர்பாபு, என்.கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, செய்தித் துறை செயலர் இரா.செல்வராஜ், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் ந.அருள்.

**சென்னை, ஜன. 13:** பெரியார், அம்பேத்கர் பெயரிலான விருதுகள் உள்பட தமிழக அரசின் சார்பில் 9 விருதுகளை விருதாளர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் சனிக்கிழமை வழங்கினார்.

இதற்கான நிகழ்வு தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

சமூகநீதிக்காகப் பாடுபடுபவர்களுக்காக தந்தை பெரியார் விருது, ஆதிதிராவிடர் பழங்குடியின மக்களின் முன்னேற்றத்துக்காகப் பணியாற்றுவோருக்கு டாக்டர் அம்பேத்கர் விருது தமிழக அரசு சார்பில் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகிறது.

2023-ஆம் ஆண்டுக்கான தந்தை பெரியார் விருது சமூக நீதி கண்காணிப்புக் குழுவின் தலைவர் சுப.வீரபாண்டியனுக்கும், டாக்டர் அம்பேத்கர் விருது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் பெ.சண்முகத்துக்கும் அறிவிக்கப்பட்டது.

இருவருக்கும் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வின்போது விருதுகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். இந்த விருதுகள் விருதுத் தொகை ரூ.5 லட்சம், தங்கப் பதக்கம், தகுதியுரை ஆகியவற்றைக் கொண்டதாகும்.

**தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாடு:** தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுக்காகத் தொடர்ந்து உழைப்போருக்காக திருவள்ளுவர், முன்னாள் முதல்வர்கள் அண்ணா, காமராஜர் பெயர்களில் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2024-ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருதை தவத்திரு பாலமுருகனடிமை சுவாமிகளுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். பள்ளி மாணவர்களுக்கு 1983-ஆம் ஆண்டிலிருந்து திருக்குறள் ஒப்பித்தல், கட்டுரை, பேச்சுப் போட்டிகளை பாலமுருகனடிமை சுவாமிகள் நடத்தி வருகிறார்.

திராவிட இயக்கத்தில் ஈடுபட்டு பல்வேறு போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவரான பத்தமடை பரமசிவத்துக்கு பேரறிஞர் அண்ணா விருதையும், தமிழ் வளர்ச்சிக்காக இளங்கோ இலக்கிய மன்றம் உள்பட பல்வேறு அமைப்புகளைத் தொடங்கியவரும், முன்னாள் எம்.எல்.ஏ.வுமான உ.பலராமனுக்கு பெருந்தலைவர் காமராஜர் விருதையும் முதல்வர் வழங்கினார்.

கவிஞர் பழனி பாரதிக்கு மகாகவி பாரதியார் விருதையும், 92 வயதிலும் தனித்தமிழ் வேட்கை அகலாமல் அருந்தமிழ்ப் பணியாற்றி வரும் எழுச்சிக் கவிஞர் ம.முத்தரசுக்கு பாவேந்தர் பாரதிதாசன் விருதையும் முதல்வர் வழங்கினார்.

ஆவணக் காப்பகங்களில் தகவல்களைத் திரட்டி வரலாற்று நூல்களை எழுதியவரும், சோழமண்டலக் கடற்கரையை முழுமையாக ஆய்வு செய்தவருமான எஸ்.ஜெயசீலஸ்டீபனுக்கு தமிழ்த் தென்றல் திரு.வி.க.விருதையும், தமிழ் இலக்கணத்தை மாணவர்கள் எளிதில் கற்க வகை செய்த முனைவர் இரா.கருணாநிதிக்கு முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் விருதையும் முதல்வர் ஸ்டாலின் வழங்கினார்.

இந்த விருதுகள் ஒவ்வொன்றும் விருதுத் தொகை ரூ.2 லட்சமும், ஒரு சவரன் தங்கப் பதக்கமும், தகுதியுரையும் அடங்கியதாகும்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், பி.கே.சேகர்பாபு, என்.கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலர் சிவ் தாஸ் மீனா, தமிழ் வளர்ச்சித் துறை செயலர் இரா.செல்வராஜ், இயக்குநர் ந.அருள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# கோவையில் ரூ.19.50 கோடியில் நவீன வன உயிரின மறுவாழ்வு மையம்

KUMAR MAYILSAMY

**சென்னை, ஜன. 13:** கோவை வனக் கோட்டத்தில் உள்ள பெத்தி குட்டை பகுதியில் ரூ. 19.50 கோடியில் வன உயிரின மறுவாழ்வு மையம் அமைக்க தமிழக அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

இது குறித்து வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

வனவிலங்கு பாதுகாப்பு சட்டம் -1972, வன விலங்குகளின் பாது காப்பு, மேலாண்மைக்கான கட்டமைப்பை வழங்குகிறது. அதிகரித்து வரும் உயிரியல் அழுத்தம், காலநிலை மாற்றத்தால், மனிதர்கள் – வன விலங்குகளுக்கு இடையேயான மோதல்கள் அதிகரித்துள்ளன.

இந்த நிலையில், வனவிலங்குகளுக்குத் தேவையான மீட்பு, சிகிச்சை, மறுவாழ்வு ஏற்படுத்தும் வகையில் நிபுணர்களைக் கொண்ட சிறப்பு மையங்களை அமைப்பதுக்கான அவசியம் ஏற்பட்டுள்ளது.

அதன்படி, கோவை வனக்கோட்ட சிறுமுகையில் உள்ள மோடூர் – பெத்திக்குட்டை காப்புக் காட்டில் ரூ. 19.50 கோடியில், 53 ஹெக்டேர் பரப்பளவில் வன உயிரிங்களுக்கான முதல் அதிநவீன மீட்பு, சிகிச்சை மற்றும் மறுவாழ்வு மையம் அமைக்கப்படவுள்ளது.

இந்த மீட்பு மையம் காயமடைந்த, கைவிடப்பட்ட, நோய்வாய்ப் பட்ட வன உயிரினங்களை மீட்பது, அறிவியல் ரீதியான முறையில் தனிமைப்படுத்துதல், புனர்வாழ்வு மற்றும் மறுவாழ்வு செய்வதுக் கான நெறிமுறைகளைத் தரப்படுத்துதல் உள்ளிட்ட பணிகளை மேற் கொள்ளும்.

மேலும் மனித, வனவிலங்கு மோதல் பிரச்னைகளைத் தீர்ப் பதற்கான ஆலோசனை, வழிகாட்டுதலுக்கான முக்கியத்துவம் வாய்ந்த மையமாகவும் இது செயல்படும் என அதில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

https://t.me/dinamanihighlights

# தூய்மை நகரம்: 37-ஆவது இடத்துக்கு சென்னை முன்னேற்றம்

KUMAR MAYILSAMY

**சென்னை, ஜன. 13:** மத்திய அரசின் தூய்மையான நகரங்களுக்கான பட்டியலில் சென்னை 44-ஆவது இடத்தில் இருந்து 37-ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

இது குறித்து பெருநகர சென்னை மாநகராட்சி (திடக்கழிவு மேலாண்மை துறை) சார்பில் சனிக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

மத்திய அரசு ஆண்டுதோறும் தூய்மையான நகரங்களை பட்டியலிடுகிறது. இந்தப் பட்டியல் கடந்த ஆண்டு 10 லட்சத்துக்கு அதிகமான மக்கள்தொகை நகரங்கள் தனியாக தரவரிசை நிர்ணயிக்கப்பட்டது.

அதில் மொத்தமுள்ள 45 நகரங்களில் சென்னை 44-ஆவது இடத்தைப் பிடித்தது. அதைபோல், கடந்த வியாழக்கிழமை வெளியிட்ட தூய்மையான மதிப்பீடு தரவரிசை பட்டியலில் 10 லட்சத்துக்கு அதிகமான மக்கள்தொகை கொண்ட மதிப்பீடு கணக்கில் கொள்ளவில்லை.

ஒரு லட்சத்துக்கு அதிகமான மக்கள்தொகை கொண்ட நகர உள்ளாட்சி அமைப்புகளுக்கு மட்டும் தரவரிசை நிர்ணயிக்கப்பட்டு மதிப்பீடு வழங்கப்பட்டது. இதில் சென்னை 199-ஆவது இடத்தைப் பிடித்துள்ளது.

இந்த தரவரிசையை 10 லட்சத்துக்கு அதிகமான மக்கள் தொகை கொண்ட நகரங்களுடன் ஒப்பிடும் போது சென்னை 37-ஆவது இடத்தில் உள்ளது. கடந்த ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட மதிப்பெண்ணில் 37.5 சதவீதம் (2866.14) பெற்றது. ஆனால் இந்த ஆண்டு மொத்த மதிப்பெண்ணில் 45.4 சதவீதம் (4,313.79) பெற்று முன்னேற்றம் அடைந்துள்ளது.

இது தேசிய சராசரி மதிப்பெண்ணை விட அதிகம். கடந்த ஆண்டை விட நிகழாண்டில் அதிக மதிப்பெண்கள் பெற்று தரவரிசையில் முன்னனியில் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

https://t.me/dinamanihighlights